# கல்வி



மாணவர்கள் விவாதம் செய்தல்



*இயந்திர மனிதன்* உருவாக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் FIRST Robotics Competition, Washington, D.C.



வகுப்பறையில் கற்பித்தல், ஆய்வு உள்ளடக்கத்தில் அரசியல் உள்ளடக்கத்தை இணைத்தல் அல்லது மாணவர்களை கற்பிப்பதற்காக தங்கள் பங்கை துஷ்பிரயோகம் செய்யும் ஆசிரியர்கள் சிந்தனை சுதந்திரம் மற்றும் விமர்சன சிந்தனையை தேடும் கல்வியின் நோக்கங்களுக்கு எதிராக செல்கின்றனர்.

**கல்வி** (Education) என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும்.[1] கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம்.

அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்கிறது. இது சமுதாய நுட்பத் தகைமை ஏற்படுத்துவதையும் கல்வி கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும்[2].

இது திறன்கள்,தொழில்கள், உயர்தொழில்கள் என்பவற்றோடு, மனம், நெறிமுறை, அழகியல் என்பவை சார்ந்த வளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியில் பங்கு பெறச்செய்யும் அமைப்பு ஆகும்.

கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் வருகிறது. ஆனால் குழந்தைப் பருவத்தில் கற்கும்போது முழுமையான பரிமாணம் அடைந்து முழுமையான மனிதனாகவும், சமுதாயத்திற்கு உதவிகளை அளிக்கும்படியும் மாற்றம் அடைகின்றனர்.

## கல்வி என்ற சொல்லின் பொருள்[தொகு]

**கல்வி** என்ற தமிழ்ச் சொல் **கல்** (ஆய்வு செய்) என்ற வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது.[3] கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் Education என்பதாகும். இந்தச் சொல் ēducātiō [4] என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்த ēducātiō சொல்லானது *வளர்த்தல்* என்ற பொருளைக் குறிக்கிறது. மேலும் இது *கற்பித்தல், பயிற்றுவித்தல்* என்னும் பொருளைத் தரும் ēducō [5] என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சொல்லிற்கு ஒத்த சொல் வெளிக்கொணரல், உயர்த்திவிடல், முன்னேற்றிவிடல் போன்ற பொருளைத் தரும் ēdūcō என்பதாகும். எனவே கல்வி என்பது தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களை உள்ளார்ந்த தகுதிகளை வெளியில் கொண்டு வருவது ஆகும்.

கல்வி என்பது புறத்திலிருந்து நம் அகத்திற்கு செல்வது. நம் உடம்பிலுள்ள அறியும் கருவிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி . இவை மூலமாக வெளியிலிருந்து செய்திகள் உள்ளே செல்கின்றன.

## வரலாற்றுப் பின்னணி[தொகு]



பழங்கால இசுலாமியப் பள்ளி , பக்கு, அசர்பைஜான்



நாளந்தா பல்கலைக் கழகம் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு), பீகார் மாநிலம், இந்தியா



பிளேட்டோ கல்விக்கூடம், பொம்பெயி, பழங்கால உரோமானிய நகரம்



மட்டேயோ ரிக்கி (Matteo Ricci) (இடது), சு குவாங்கி (Xu Guangqi) (வலது). யூக்ளிட்ஸ் எலமென்ட்ஸ் (Euclid's Elements), சீன மொழிப் பதிப்பு, 1607.

பண்டைக் காலங்களில், மக்கள் ஒருவருக்கொருவர் பார்த்துப் பழகியும், பேச்சு வழக்கிலும், கதைகள் சொல்லியும், கேட்டும் அறிவை வளர்த்துக் கொண்டனர். இந்தப் பின்னணியில் இருந்து கல்வி முறைகள் உருவாயின. எடுத்துக் காட்டாக, கி.மு. 2055-இல், எகிப்தில் பள்ளிக்கூடங்கள் இருந்தன [6]. பிளேட்டோ கிரேக்கத்தில் உள்ள ஏதென்சு நகரத்தில் கி.மு. 387-இல் கல்விக்கூடம் ஒன்றை நிறுவினார். அரிஸ்டாட்டில் (கி.மு.384-கி.மு.322) அங்கு இருபது ஆண்டுக் காலம் பயின்றார். இந்தக் கல்விக்கூடம் தான் ஐரோப்பாவின் முதல்

கல்விக் கூடம் ஆகும்.[7] பின், கி.மு.330-இல் அலெக்சாண்டிரியாவில் ஒரு நூலகம் அமைக்கப் பட்டது. உரோமாபுரியின் வீழ்ச்சி (கி.பி. 476), ஐரோப்பாவில் கல்விக்கூடங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக ஆயிற்று.[8]

சீனாவில், கன்பூசியஸ் (கி.மு.551– கி.மு.479) பரப்பி வந்த கருத்துக்கள் இன்றுவரை சீனா, கொரியா, ஜப்பான், வியட்நாம் ஆகிய நாடுகளில் பின்பற்றப் படுகின்றன.[9]

தென் அமெரிக்காவில், அஸ்டெக் இனத்தவர் (கி.பி. 1300 - கி.பி. 1521 ) **தலகாகுஅபகுவாலிஸ்திலி** (tlacahuapahualiztli) என்ற ("ஒருவரை அறிவுள்ளவராக ஆக்கும்") முறையைக் கையாண்டு வந்தனர்.[10][11][12] உரோமாபுரியின் வீழ்ச்சிக்குப் பிறகு, கிறித்துவத் திருக்கோவில்கள் கல்வி நிறுவனங்களை அமைத்து நடத்தி வந்தன.[13] பிறகு, அவற்றில் ஒரு சில, பல்கலைக் கழகங்களாக உருவெடுத்தன.[8] கி.பி. 1450-இல் யோகான்னசு கூட்டன்பர்கு(Johannes Gutenberg) என்பவரால் அச்சு எந்திரம் கண்டு பிடிக்கப் பட்ட பிறகு, கல்வி விரைவாகப் பரவலாயிற்று.

இன்று, பல நாடுகளில், இளைய சமுதாயத்தினருக்குக் கல்வி காட்டாயமாக ஆக்கப் பட்டுள்ளது